செய்தி வெளியீடு எண் :1369 நாள் : 18.12.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டில் 14 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார்கள். அதில், பாரதியார் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு சென்னை பாரதி நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித் துறையினரால் நடத்தப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் 04.12.2021 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் பெரும்புலவன் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமைகளை புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக 3–வது வாரமாக இன்று 18.12.2021 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில் 'சங்கீத கலா பாரதி' காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்துவான் முனைவர். 'வலிவலம்' ஆர்.எஸ்.வெங்கட்ராமன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் எழுத்தாளரும் திரைப்பட இயக்குநருமான திரு.பாரதி கிருஷ்ணகுமார் அவர்கள் உரையாற்றும்போது,

கவிஞராக, தேசப் பக்தராக, மொழிப் பெயர்ப்பாளராக, பகுத்தறிவு, சிறுகதை எழுத்தாளராக விளங்கிய பாரதியார் அவர்களின் நினைவு நூற்றாண்டு விழாவை வாரந்தோறும் தொடர் நிகழ்ச்சியாக 3 வது வாரமாக தமிழ்நாடு அரசு நடத்தி வருகிறது.

பாரதியார் அவர்கள் கவிதைக்கு இசை வடிவம் கொடுத்திருக்கிறார்கள். எந்த கவிதையை எந்த ராகத்தில் பாட வேண்டும் என்ற இசைக் குறிப்பினையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். இசையோடு பாடுகிற பண்புடையவர் அவர். அவரது பாடல்கள் கேட்பவரது மனதைக் கவர்ந்திழுக்கக் கூடிய ஆற்றல் உண்டு. இவர் இசையைப் பற்றி ஏராளமான கட்டுரைகள் எழுதியுள்ளார். இசைக்கு அவர் ஆற்றிய

தொண்டினை பாராட்டும் வகையில் அவருக்கு இசையஞ்சலி நிகழ்ச்சியை நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு.வி.என்.அண்ணாதுரை அவர்கள் வரவேற்று பேசினார். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.எஸ்.ரமேஷ் நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**